2016 ஆகஸ்ட் 19]

2. 17–8–2016 அன்று முதல் ஒரு வார காலத்திற்கு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கிவைத்ததை மறுபரிசீலனை செய்யக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு, என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு முக்கியமான மானியக் கோரிக்கைகள் இனி நடைபெற இருக்கின்றன. இன்றைக்கு விவசாயத் துறை மானியக் கோரிக்கை நடைபெறவுள்ளது. வருகின்ற 22 ஆம் தேதி காவல் துறை மானியக் கோரிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே பதில் சொல்ல இருக்கின்றார்கள். இப்படி முக்கியமான துறைகளினுடைய மானியக் கோரிக்கைகள் நடைபெறுகின்றபோது, திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் அதில் கலந்துகொண்டு, தங்களுடைய கருத்துகளை எடுத்துச் சொல்லவும், தங்களுடைய விளக்கத்தைப் பெறவும், உங்களுடைய தீர்ப்பினை தாங்கள் மறுபரிசீலனை செய்து அவர்களை அனுமதிக்குமாறு உங்களை மீண்டும் நான் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 17 ஆம் தேதி அன்று நடந்த நிகழ்ச்சியின் காரணமாக, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தின் விளைவாக சபாநாயகர் அவர்கள் ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கின்றீர்கள். அந்தத் தீர்ப்பைப் பற்றி நான் விமர்சனம் செய்ய விரும்பவில்லை. ஆனால், அதன் அடிப்படையில் இன்னும் அவர்களைத் தொடர்ந்து வெளியில் அனுப்பி வைத்திருப்பதைப்பற்றி நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும். நமது சபையைப் பொறுத்தமட்டில், இதற்கு பல முன்னுதாரணங்கள் இருக்கின்றன. அந்த முன்னுதாரணங்களையெல்லாம் இப்போது சபையிலே சொன்னால், அது பல பிரச்சினைகளைக் கிளப்புவதற்கு வாய்ப்பிருக்கிறது. தயவுசெய்து நீங்கள் உங்களது முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர்*

அவர்கள், அவர்களுடைய துறைசார்பாகப் பதில் சொல்லவிருக்கின்றார்கள். அன்றைக்கு எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் நிச்சயமாக சட்டமன்றத்தில் இருக்க வேண்டும். அதற்குரிய நடவடிக்கையை எடுத்து, நீங்கள் அவர்களை மீண்டும் சபைக்கு அழைக்க வேண்டும் என்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே மிகுந்த கனத்த இதயத்தோடு வந்திருக்கின்றேன். சிறுபான்மை சமுதாயப் பேரியக்கத்தின் ஒரே பிரதிநிதியாக வந்திருக்கின்ற நான், என்னுடைய சட்டமன்றக் கடமையை ஆற்ற வேண்டுமென்ற நிலையிலும், ஒட்டுமொத்தமாக எதிர்க்கட்சி உறுப்பினர்களெல்லாம் அவை நடவடிக்கைகளில் பங்கேற்காமல் இருப்பது மிகவும் வேதனை அளிக்கக்கூடிய விஷயமாகும். ஜனநாயகம் தழைக்க வேண்டுமென்ற அடிப்படையில், சட்டமன்றத்தில் நடந்த ஒரு விஷயத்தை இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஒருங்கிணைந்த மதராஸ் மாகாணம், Madras Presidency–யிலே. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேச வருவதை சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தப்பட்டதுதான். அப்போது எதிர்க்கட்சித் தலைவராக, எங்கள் இயக்கத்தைச் சார்ந்த காயிதே மில்லத் அவர்கள் இடம் பெற்றிருந்தார்கள். அப்போது எங்களோடு எதிரணியில் இருந்த கம்யூனிஸ்டு உறுப்பினர் அவர்கள் ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து, அதனை வழிமொழிவதற்கு ஆளில்லாத சூழ்நிலையில், எதிரணியில் இருப்பவர் என்றும் பார்க்காமல், அவரது தீர்மானம் இந்த அவையில் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்காக வேண்டி, அதனை வழிமொழிந்த பெருமை அன்றைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த எங்கள் தலைவர், காயிதே மில்லத் அவர்களையேச் சாரும். அந்த அளவிற்கு ஜனநாயகம் தழைத்திருந்த

நமது சட்டமன்றத்தில், அனைவரும் ஜனநாயகக் கடமையை நிறைவேற்றக்கூடிய வகையில் நீங்கள் தயவுகூர்ந்து உங்களுடைய தீர்ப்பினை மறுபரிசீலனை செய்ய வேண்டும். மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், "மக்களால் நான், மக்களுக்காகவே நான்" என்று அறிவித்து, இன்று பல்வேறு திட்டங்களை அறிவிக்கிறார்கள். அந்த 'மக்களில்' நாங்களும் ஒருவராக இருக்கின்றோம். அ.தி.மு.க–வைச் சேர்ந்தவர்கள் மட்டும் மக்களல்ல, நாங்களும் மக்கள்தான். எங்களுடைய ஜனநாயகக் கடமையை நிறைவேற்றக்கூடியவகையில், குறிப்பாக 22 ஆம் தேதியன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் காவல் துறை மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்திலே பதிலளிக்க இருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கையன்று, ஜனநாயகக் கடமையை முழுமையாக நிறைவேற்றக்கூடியவகையில், அனைத்து தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களும் பங்கேற்கக்கூடியவகையில், நாங்கள் எல்லாம் ஜனநாயகக் கடமையை நிறைவேற்றக்கூடியவகையில் நீங்கள் தயவுகூர்ந்து உங்களுடைய முடிவை மறுபரிசீலனை செய்து தி.மு.க. உறுப்பினர்கள் இந்த அவையில் பங்கேற்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்பதை, இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் சார்பாக மிகவும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

மதுரை (வடக்கு) தொகுதி, வண்டியூர், செல்லூர் கண்மாய்களைத் தூர் வாருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர், திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள்.

திரு. வி.வி. இராஜன் செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர் வள ஆதாரங்களைக் காப்பதிலும்... (குறுக்கீடுகள்)

2. 17–8–2016 அன்று முதல் ஒரு வார காலத்திற்கு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கிவைத்ததை மறுபரிசீலனை செய்யக் கோருதல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், திரு. இராஜன் செல்லப்பா, ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் வைத்த கோரிக்கைக்கு நேற்றைக்கே என்னுடைய பதிலை விளக்கமாக இந்த அவையில் நான் சொல்லிவிட்டேன். மேலும், எவ்வளவு பொறுமையைக் காக்க முடியுமோ அவ்வளவு பொறுமை காத்து, வேறு வழியின்றிதான் கடைசியாக அப்படி ஒரு நடவடிக்கையை எடுக்க வேண்டிய சூழ்நிலைக்கு நான் தள்ளப்பட்டேன். ஆகவே, எடுத்திருக்கிற முடிவில் மறுபரிசீலனைக்கு வாய்ப்பில்லை என்பதை உங்கள் கோரிக்கைக்கு என்னுடைய பதிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இது அவை நிறைவேற்றிய தீர்மானம். (குறுக்கீடுகள்) ஏற்கெனவே இந்த அவை நிறைவேற்றித் தந்த தீர்மானத்தைத்தான் நான் செயல்படுத்தியிருக்கிறேன். ஆகவே, நான் அதை மறுபரிசீலனை செய்வதற்கு வாய்ப்பேயில்லை என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

3. கவன ஈர்ப்பு—*தொடர்ச்சி*

மதுரை (வடக்கு) தொகுதி, வண்டியூர், செல்லூர் கண்மாய்களைத் தூர் வாருதல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள்.*

திரு. வி.வி. இராஜன் செல்லப்பா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர் வள ஆதாரங்களைக் காப்பதிலும், நீர் வளத்தைப் பெறுவதில் தமிழகத்தின் உரிமைகளுக்காகப் போராடி வெற்றி மேல் வெற்றியைப் பெறுவதில், தனக்கு நிகர் . . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. வி.வி. இராஜன் செல்லப்பா, நிகழ்ச்சி நிரலில் இருப்பதைப் படியுங்கள். (குறுக்கீடுகள்)*

திரு. வி.வி. இராஜன் செல்லப்பா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் படிக்கப் போகிறேன்.*